MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

விளையாட்டுத் தினம் (Sports Day) – மதுரம் நாராயணன் மையம்:





மதுரம் நாராயணன் மையத்தில் **07/02/2025** அன்று விளையாட்டுத் தினம் கொண்டாடப்பட்டது. பல வாரங்களாக ஆவலுடன் தயாராகிக் கொண்டிருந்த குழந்தைகளுக்கு இது ஒரு உற்சாகமான நிகழ்வாக இருந்தது. குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் அனைத்து விதமான விளையாட்டுகளிலும் மகிழ்ச்சியுடன் பங்கேற்றனர். குழந்தைகளின் மகிழ்சியால் முழு மைதானமும் பேரொளியால் ஒளிர்ந்தது.இதில் பங்கேற்ற அனைவருக்கும் மறக்கமுடியாத நாளாக அமைந்தது.

மகாசிவராத்திரி பூஜை:





பால மந்திரில் **26/02/2025** அன்று மகாசிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் ஒன்றாக அமர்ந்து பாடல்களைப் பாடினர். விழாவின் கலாச்சார முக்கியத்துவத்தை அவர்கள் அறிந்துக் கொண்டனர். வாழ்வில் இருளையும் அறியாமையையும் நீக்குவதற்காக இந்தப் பண்டிகை கொண்டாடப்படுவதுபோல, குழந்தைகளும் நோன்பு இருந்து, தெய்வீக உதவியுடன் எல்லா விதமான துன்பங்களை நீங்கிட பிரார்த்தனை செய்தனர்.

சமுதாய வளைகாப்பு:





பால மந்திர் நிறுவனம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் **(ICDS - I C D S)** இணைந்து **27/02/2025** அன்று, சுமார் **100** கர்ப்பிணிப் பெண்களுக்குச் சமூக வளைகாப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கும்மிடிப்பூண்டியை சேர்ந்த எம்.எல்.ஏ திரு.கோவிந்தராஜன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து பால மந்திரைச் சேர்ந்த திருமதி.லட்சுமி கோபால் அவர்கள் ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடுகள் பற்றியும், கர்ப்ப காலத்தின் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறித்தும் பேசினார்.

உங்கள் சமூகப் பணியாளர்களைப் பற்றி அறிந்து கொள்வோம் :



திரு.வாசு அவர்கள் சேலம் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் வணிக நிர்வாகத்தில் இளங்கலை பட்டமும் **(BBA),** சமூகப் பணியில் முதுகலை **(MSW)** பட்டமும் முடித்துள்ளார். கடந்த மார்ச் **2024** இல் பால மந்திர் நிறுவனத்தில் கின்ஷிப் கேர் திட்டத்தின் சமூக பணியாளர் இணைந்து சேலம் மாவட்டத்தில் பணிபுரிந்துவருகிறார்.

இவர் தற்போது **81** குடும்பங்களைச் சேர்ந்த **138** குழந்தைகளைக் கவனித்து வருகிறார். சேலம் மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களில் சமூக தன்னார்வலராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இவர் குழந்தை நேய நகர உருவாக்கத்திற்காக **(Child Friendly City)**பல்வேறு முன்முயற்சிகளை செய்துள்ளார். குழந்தைகள் பாதுகாப்பு பங்காளர்கள் குழுவின், ஆரம்ப கால **(2019)** முன்னோடி செயற்திட்ட குழுவில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சேலம் அயோத்திப்பட்டணம் சுற்றியுள்ள எட்டு கிராமங்களில் பெண்கள் சுய உதவி குழுக்களின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியவர்.

பால மந்திர் - கின்ஷிப் கேர்:

பிப்ரவரி- 2025 நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் சுமார் 868 குடும்பங்களும் 1529 குழந்தைகளும் கின்ஷிப் கேர் திட்டத்தின் பயணாளிகளாக உள்ளார்கள். இவர்கள் அனைவரும் பால மந்திரின் பல்வேறு சேவைகளால் பயனடைந்து வருகின்றனர்.

Social work requires a strong commitment to service, a passion for justice, and a willingness to make a difference.

-Vasu

குழு ஆலோசனை அமர்வு:





திருமதி. சுகன்யா மற்றும் திருமதி. சரண்யா அவர்களால் குழு ஆலோசனை அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, இதில் ஆலோசகர் திருமதி. வானதி பெற்றோர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் தளமாக அமைந்து. தாய்மார்கள் தங்கள் இழப்பைச் சமாளித்த அனுபவங்களையும், துயரத்திலிருந்து அவர்கள் எவ்வாறு வலிமையைக் கொண்டார்கள் என்பதையும் பகிர்ந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து, அவர்களின் துயரத்தைப் போக்க ஆலோசகர் திருமதி. வானதி அறிவுரைகளை வழங்கினார்.

திருமதி ராஜியும் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு தாய்மார்களை ஊக்குவித்தார். பால மந்திர் தாய்மார்களுக்குப் பயனுள்ள தேவையின் அடிப்படையிலான ஆலோசனை சேவைகளை வழங்குகிறது மற்றும் அவர்களை ஊக்குவித்து மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

கிருஷ்ணகிரி கின்ஷிப் கேர் நிகழ்ச்சி:

KINSHIP CARE EVENT KRISHNAGIRI 23/02/2025



கடந்த **23/02/2025** அன்று கிருஷ்ணகிரி அதியமான் பொறியியல் கல்லூரியில் கின்ஷிப் கேர் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் **60** குடும்பங்களைச் சேர்ந்த **111** குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்



இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.டி.சரவணன் அவர்கள் பங்கேற்றார். குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவளிக்க பால மந்திர் மேற்கொள்ளும் முயற்சிகளை அவர் பாராட்டினார் மேலும் பெற்றோர்கள் குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுவதன் முக்கியத்துவம் குறித்தும்பேசினார்.





இந்த நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பு அழைப்பாளராக கிராமப்புற சமூக மேம்பாட்டு அசோசியேட் அமைப்பைச் சேர்ந்த டாக்டர்.நளினி கேசவ்ராஜ் அவர்கள் கலந்துக் கொண்டார்.

தனது உற்சாகமான உத்திகளைப் பயன்படுத்தி, இன்றைய சமூகத்தில் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றைக் கையாள்வதற்கான வழிமுறைகள் குறித்தும் பயனாளிகளிடம் விளையாட்டுகள் மூலம் விளக்கம் அளித்தார்.

இதற்குப் பயனாளிகள் நடுவே சிறப்பான வரவேற்பு கிடைத்தது. குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அனைத்து நிகழ்வுகளிலும் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பங்கேற்றனர்!

ஒரு நாள் சுற்றுலா - காஞ்சிபுரம்:



காஞ்சிபுரம்,ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்திற்கு **26** குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்காக ஒருநாள் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார் சமூகப் பணியாளர் பெஞ்சமின்.





முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது படுகொலை குறித்தும், அங்குள்ள சிற்பக் கலைகளின் பண்புகளைப் பற்றி சமூகப் பணியாளர் பெஞ்சமின் எடுத்துரைத்தார்.

குழந்தைகள் அங்குள்ள சிற்பக் கலைகளை வியப்புடன் கண்டு மகிழ்ந்தனர். நினைவுச்சின்னத்தைச் சுற்றியுள்ள ஏழு தூண்கள் தர்மம், சத்யா, நியாயம், விஞ்ஞானம், தியாகா, சாந்தி மற்றும் சம்ரிதி ஆகிய முக்கிய மதிப்புகளைக் குறிக்கின்றன என்று கற்றுக்கொண்டனர். இது வயது வித்தியாசமின்றி அனைவரும் விரும்பக்கூடியது சுற்றுலாவாக இருந்தது, குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு இது மகிழ்சியான நாளாகவும் அமைந்தது

இதனைத் தொடர்ந்து குழந்தைகள் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நேரத்தைச் செலவிட்டனர். குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு இது மகிழ்சியான நாளாகவும் அமைந்தது.



கல்வி உதவி:



கோவிட் **-19** ஆல் ஒன்று அல்லது இரண்டு பெற்றோர்களையும் இழந்த குழந்தைகளுக்குக் கல்வி ஆதரவை வழங்கும் ஒரே நோக்கத்துடன் கின்ஷிப் கேர் திட்டம் கடந்த ஜூலை **2021**இல் தொடங்கப்பட்டது. சிறியதாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம், இப்போது பல்வேறு இடங்களில் **1529** குழந்தைகளுக்கு ஆதரவை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, குழந்தைகளுக்குத் தரமான கல்வியை வழங்குவதாகும். கல்வியால் மட்டுமே குழந்தைகள் தங்கள் நல்லநிலையை அடைவார்கள்.

இதற்காகப் பால மந்திர் மூலம் குழந்தைகளின் திறனுக்கு ஏற்பப் பல்வேறு ஆன்லைன் வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகுப்புகள் மட்டுமல்லாமல் பெற்றோர்களின் சுமையைக் குறைப்பதற்காகக் குழந்தைகளின் பள்ளி கட்டணத்தில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி வருகிறது. இந்தச் சேவையின் மூலம், பல குழந்தைகள் அவர்களது கல்வியில் சிறந்தவராக விளங்கி வருகின்றனர். அதுமட்டுமின்றி பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளைத் தங்களுக்கு விருப்பமான பள்ளிகளில் சேர்த்து கல்வியை தொடர்கிறார்கள்.

KINSHIP CARE சேவைகள்:







ழ தைக ட நெ கமாக இ பத கான ல எ ய வ றைக :

Parent's Corner:

வேகமான உல , ழ தைக ட செல நேர தை நா பெ பா கவ க தவற றோ .பெ றோ க த க ழ தைக தேவைகளை செ ய கா ல த மாலைவரை உழை ன . இதனா நா ழ தை ட ற த நேர தை செல றோ அவ களை பல வ க பா ற . ழ தை வா கை பெ றோ க ப க யமான . இ ழ தைக பெ றோ க டனான நெ க தை ற ப ம லாம , அவ க உண களை செ ற .

தினசரி உரையாடல்: பள்ளியில் நடந்ததை பற்றிக் கேள்விகள் கேளுங்கள் (எடுத்துக்காட்டாக, "இன்று உன்னுடைய நாள் எப்படி இருந்தது?" என்று கேட்கலாம்). அவர்களின் நண்பர்கள், விருப்பங்கள், கவலைகள்பற்றிப் பேசுங்கள்.

திரை நேரத்தைக் குறைத்து குடும்ப நேரம் அதிகரிக்கவும்: இரவு உணவை ஒன்றாக உட்கொண்டு, மகிழ்சியான உரையாடல்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

சிறிய சாதனைகளைக் கொண்டாடுங்கள்: குழந்தைகள் செய்த சிறிய விஷயங்களைப் பாராட்டுங்கள் (ஏதாவது புதியதை கற்றுக்கொண்டால், உதாரணமாக, "நீ நல்லா முயற்சி பண்ணிருக்க!" என்று சொல்லுங்கள்).

வெளிப்புற விளையாட்டுக்கள் ந்தைகளை வெளியில் விளையாட அனுப்புங்கள் – சுறுசுறுப்பாக இருப்பது உடல்ந ற்றும் மனநிலைக்கு நல்லது.

ஒன்றாகச் செய் பெற்றோர்கள் குழந் வண்ணம் தீட்டுதல், படித்தல் போன்றவை சிறந்தது. களுடன் சமைத்தல், புதிய செயல்க பிடுதல் போன்றவை அவர்களை காகமாக வைத்திருக்கும்.உங்கள் குழ ருடன் நீங்கள் நேரத்தைச் செலவிடும் ரம் எவ்வளவு விரைவாகக் கடந்து து என்று நீங்கள் ஆ







YOUNG ACHIEVERS



தீபன் (காஞ்சிபுரம்)
புரோபீஷன்.



ஹாசினி (காஞ்சிபுரம்)
ஃபுட் கார்விங்.



தன்ஷிகா (காஞ்சிபுரம்)
ஒழுக்கம்.



பத்ரேஷ் (காஞ்சிபுரம்)
பாட்டுப் போட்டி



மோனிஷ் (காஞ்சிபுரம்)
பொட்டேட்டோ ரேஸ்.



அவந்திகா (காஞ்சிபுரம்)
கையெழுத்துப் போட்டி.



கனிஷ்கா ஸ்ரீ (காஞ்சிபுரம்)
பொட்டேட்டோ ரேஸ்.



சர்வேஷ் (காஞ்சிபுரம்)
விளையாட்டு போட்டி.



தன்ஷிகா (காஞ்சிபுரம்)
பொருட்காட்சி முதல் பரிசு.

YOUNG ACHIEVERS



ரித்திகா (காஞ்சிபுரம்)
விளையாட்டு போட்டி



கனிஷ்கா ஸ்ரீ (காஞ்சிபுரம்)
பொட்டேட்டோ ரேஸ்.



ஓவியா (திருவள்ளூர்)
சிலம்பம் போட்டி.



தாரணி (திருவண்ணாமலை)
யோகா.



மேஸ்விகா முகந்த்
(நாமக்கல்) நடனப் போட்டி



வினோதினி
(திருவண்ணாமலை) யோகா.



சாய்சரண் (கிருஷ்ணகிரி)
கராத்த



ஸ்ரீ (சென்னை) வெள்ளிப்
பரிசு.

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!